**செய்தி வெளியீடு எண் : 110** **நாள்: 15.01.2022**

# செய்தி வெளியீடு

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள் அறிவுறுத்தியவாறு, 16/1/2022 அன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து இணைப்பதிவாளர் (பொவிதி)–2, சென்னை தெற்கு மண்டல கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வரவேண்டிய நிலுவையுள்ள நியாய விலைக் கடைகள் மட்டும் காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை திறந்து, பொங்கல் பரிசுத் தொகுப்பினை கடைகளில் இறக்கும் பணி நடைபெறும்.

17/1/2022 அன்று காலை 7.00 மணி முதல் இணைப்பதிவாளர் (பொவிதி)–2, சென்னை தெற்கு மண்டல கட்டுப்பாட்டில் உள்ள நியாய விலைக் கடைகள் திறந்து செயல்படும். இதுவரை பொங்கல் பரிசுத் தொகுப்பு 2022 பெறாத தகுதியுள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்கள், 17/1/2022 திங்கள்கிழமை காலை 7.00 மணி முதல் பொங்கல் பரிசுத் தொகுப்பினை நியாய விலைக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**